**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**
**கலைப்பீடம்**
**முதலாம் வருடக் கலைமாணிப் பரீட்சை, 2018/2019 – பருவம் - II**
**SOC 1202 – உளவியல்க் கொள்கைகள்**

இரண்டு (02) மணித்தியாலங்கள்
நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01. **ஒன்றில்,**
நடத்தைவாத அணுகுமுறையானது உளவியலில் மனித நடத்தையினை எவ்வாறு ஆய்வு செய்கின்றது. பரிசோதனைகளினை அடிப்படையாக வைத்து உதாரணங்களோடு விளக்குக.

**அல்லது**
சுற்றயல் மற்றும் மத்திய நரம்புத் தொகுதியானது எவ்வாறு செயற்படுகின்றது என்பதனை விளக்கிக் கருத்துரைக்குக.

02. உளவியல் பரிசோதனைகளில் ஆய்வு முறைமைகள் மற்றும் நுட்பங்களுக்கு இடையேயான வேறுபாட்டினைக் கருத்துரைத்து அவற்றின் தகைமைகள் மற்றும் தகைமையின்மைகள் என்பவற்றை விளக்குக.

03. "அனுபவத்தின் மூலமாகச் சார்பளவில் நிலையாக மாற்றத்திற்கு உள்ளாகின்ற நடத்தை என்பதே கற்றல் என வரையறை செய்யலாம்". கற்றல் தொடர்பான இரண்டு அணுகுமுறைகளை அடிப்படையாக வைத்து இக்கூற்றினை விளக்குக.

04. "பொதுவாக உந்துதல் என்பது நடத்தையினைத் தூண்டுவதும் மற்றும் வழிநடத்துவதுமான ஒரு செயற்போக்காகும்". மஸ்லோவின் உயர் தேவைக் கோட்பாட்டினைப் பயன்படுத்தி இக்கூற்றினை விளக்குக.

05. உணர்வு என்னும் எண்ணக் கருவினைச் சுருக்கமாக விளக்கி, உணர்வு நிலையின் பிரதான பகுதிகளை உதாரணங்களோடு விளக்குக.

06. ஆளுமை விருத்தி பற்றிய புரோயிட்டின் (Freud) உளப்பாலியல் தாக்கத்தினை விளக்குக.

07. "புலக்காட்சி மற்றும் புலனுணர்வு என்பன மிகச் சிக்கலானதோர் மனித நடத்தைகளின் பாகங்களாக மனிதனின் சுற்றுச்சூழல் நடத்தையில் ஓர் அங்கமாகக் காணப்படுகின்றது" மேற்கூறப்பட்ட கூற்றினை உதாரணங்களோடு விளக்குக.

08. தனிநபர் ஒருவரின் சமூகநல வாழ்வு என்பது மறத்தல் மற்றும் ஞாபகப்படுத்துதல் போன்ற ஒரு மனோரீதியான செயற்போக்காகும். நீங்கள் கற்றுக் கொண்ட கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினைக் கருத்துரைக்குக.

**********************